www.tamilarangam.net

# தமிழீழ விடுதலை இராணுவம்



# TAMILEELAM LIBIRATION ARMY (T.E.L.A)

# தமிழீழ விடுதலை இராணுவத்தின் முக்கிய உறுப்பினரான கூச் சேகரின் கொலையின் பின்னணியில் தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் சதி

**மாரிமுத்து சிற்சபேசன் (கூச்)**
*படைத்துறைத் தளபதி*

---

**சுத்தானந்தா (சேகர்) அரசியல் பிரிவு தலைவர்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பொருளடக்கம்


(1) கூச்சேகரின் கொலையின் பின்னணி

(2) டிசம்பர் பதினாறாம் தேதி சதிக் கும்பல் புளோட் பின்னணியில் சேகர் கூச் கொல்லப்பட்டார்.

(3) கூச் முகாமிற்கு செல்லும் போது கொலை செய்ய விருந்த திட்டத்தை மறுத்தேன்

(4) டிசம்பர் ஆறாம் தேதி கூச் கொல்லப்பட்டார்

(5) கூச் தனது இறுதி நிலையில் செந்தில் காந்தனை பார்ப்பதற்கு ஆசைப்பட்டார்

(6) டிசம்பர் இருபத்தியொன்றாம் தேதி கூச் சேகர் பின்னணியை கொலையின் பின்னணியை அறிவதற்கு ராஜன் குழுவினர் இந்தியா வந்தனர்

(7) புளோட் வாசுதேவர் செந்திலை வீட்டுக் காவலில் வைத்தனர்

(8) ராஜன் குழுவினருடன் பேச கூடாது என்றும் அவர்கள் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்று உமாமகேஸ்வரன் தெரிவித்தார்

(9) ராஜன் குழுவினர் கூச் சேகர் இருவரையும் ஏன் கொன்றீர்கள் என்று கேட்டதற்கு வேறு காரணங்கள் சொல்லி தப்பிக்க முயன்றமை

(10) தோழர் கஸ்டோ விடுதலையானால் இவரையும் கொலை செய்ய திட்டமிட்டுருந்தனர்.

(11) உமா மகேஸ்வரனின் மைத்துனன் நாகலிங்கத்திடம் சேர்ந்து காந்தன் என்னை கொலை செய்ய முயன்றமை

(12) முகமில்லிருக்கும் தோழர்கள் காந்தனின் நடவடிக்கைகள் தவறு என்றும் புளோட்டுக்கும் இக்கொலைக்கும் சம்பந்தம் இருக்கென்றும் கூறினார்கள்.


# தமிழீழ விடுதலை இராணுவத்தின் முக்கிய உறுப்பினரான கூச். சேகரின் கொலையின் பின்னனியில் தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் சதித்திட்டம்

நான் இந்தியாவிற்கு வந்து தமிழீழ விடுதலை இராணுவத்தின் பயிற்சிகளை ஒழுங்குபடுத்துவதற்காகவே கூச், பாபு, ரவி, மைக்கல் ஆகியோரும் வந்தனர். எதிர்பாராத விதமாக நாங்கள் சிறையிடப்பட்டு இரண்டு மாதங்கள் கழிந்த பின்னர் விடுதலையானோம். இதை தொடர்ந்து நான் அரசியல் பிரிவுக்கு பொறுப்பாக்கப்பட்டேன். தோழர் கஸ்டோ சம்பந்தப்பட்ட விடையங்களையும் கவனித்து தோழர் கஸ்டோவின் முழு நம்பிக்கைக்கு பாத்திரமானேன். கடந்த வருடம் நவம்பர் மாதம் 6ம் தேதி எனது உயிர் தோழர் கஸ்டோ சிங்கள இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார். இதைத் தொடர்ந்து திரு. உருத்திரமூர்த்தி போன்றவர்களினால் தளத்தில் நின்ற அனைத்து முக்கிய உறுப்பினர்களையும் அழைத்து இயக்கத்தை சீரமைக்குமாறு ஆலோசனை தரப்பட்டதை தொடர்ந்து நான் அவர்களை இங்கு அழைத்து வரும் பணியியில் ஈடுபட்டிருந்தேன். இந்த நிலையில் நான் கஸ்டோ காட்டிக் கொடுக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் எனக்கு உருவானது. ஏனெனில் தோழர் கஸ்டோ எனக்கு தெரிவித்த விடயங்களின் அடிப்படையில் தோழர் சேகரின் மீது சந்தேகம் ஏற்பட்டது அதனால் தோழர் கூச்சிற்கு கடிதம் எழுதினேன். கூச் நான் வீணாக சந்தேகிக்கின்றேன் என்றும் அப்படி நடக்கவில்லை என்றும் எனக்கு கடிதம் எழுதினார். அதைக் கண்டு நான் திருப்தி உற்றேன். ஏனெனில் தோழர் கஸ்டோவை விட தோழர் கூச் எனக்கு அதிக நெருக்கம். தோழர் கூச்சை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யும் மற்றவர்களையும் அழைத்து வர தோழர் மாறனை அனுப்பினேன். அவர் அங்கு சென்று தோழர் கூச்சுடன் மட்டும் திரும்பி வந்தார். கூச்சை சென்னையில் வைத்து சந்தித்த போதும் இருவரும் மனம் விட்டு பேசினோம் இனி இயக்கம் நடத்தவிருக்கிற நிலையைப் பற்றி ஆலோசித்தோம். தோழர் பணாக்கொடை மகேஸ்வரனிடம் ஐம்பது ஆயிரம் பணம் பெற்றோம். இந்த நிலையில் தான் மதுரை சென்றபோது தோழர் காந்தன் என்னிடம் கூறினார். கஸ்டோவைக் காட்டிக் கொடுத்ததும் கூச், சேகர் தான் எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. யார் சொன்னது என்று கேட்டேன். வேறு இயக்கத்தவரும் கதைக்கிறார்கள் நான் மதுரையில் சில ஆதரவாளரிடம் விசாரித்தேன் அவர்களும் அவ்வாறே சொன்னார்கள். காந்தனிடம் திரும்ப கதைத்த போதும் புதிதாக வந்த தோழர்கள் தோழர் கஸ்டோ பிடிப்பட்ட சமயத்தில் தாம் அங்கிருந்ததாகவும் கஸ்டோ பிடிபட்ட இடத்தில் கூச், சேகர் நிற்கவில்லை என்றும் கூறுகிறார்கள். இதுதான் உண்மை என்று கூறுனார்கள். அத்துடன் உன் மீதும் தோழர்கள் சந்தேகப்படுகிறார்கள் என்றும் என்னை தோழர் காந்தன் எச்சரித்தார். இந்த நிலையில் தான் சென்னை திரும்பினேன். நான் மிகவும் குழப்பத்தில் ஆழ்ந்திருந்தேன். உண்மையில் கஸ்டோவை காட்டி கொடுத்திருப்பார்களா என்ற வினா? எழுந்ததினால் எதுவும் செய்வதறியாது திகைத்து நின்றேன். இதனால் முகாமில் ஒரு பதட்டநிலை இருப்பதை நான் தோழர் கூச்சிற்கு சொல்லாமல் மறைத்தேன் ஏனெனில் காந்தன் கூறிய விளக்கங்கள் எனக்கு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது.

7—12—84 அன்று மறுநாள் மதுரையிலிருந்து வந்த தோழர் கூச் அவர்கள் முகாமிற்கு சென்ற போதும் நூற்றியம்பது தோழர்களால் சேர்ந்து கொல்லப்பட்டதாக சொன்னார். நான் மிகவும் கலங்கினேன் காரணம் நானும் கூச்சும்



உடலும் உயிரும் போல இருந்தோம். பிழை இருந்தாலும் பாச தன்மை கூச் மரணத்தை ஏற்றுக் கொள்ள தயாராக இருக்கவில்லை மிகவும் கலங்கி நின்றேன் எனது பதட்டத்தை போக்குவதற்காக (TELO) டெலோ நடத்திய நட்சத்திர கலைவிழாவுக்கு சென்றேன். அழைப்பிதழ் அனுப்பப்படவில்லை. நானும் மாறனும் ஐம்பது ரூபா டிக்கட் பெற்று உள்ளே சென்றோம் இன்றுதான் உருத்திரமூர்த்தியிடம் சென்று கூச் கொலை செய்த விடயத்தை கூறிய போது தகராறு ஏற்பட்டது. போஸ் தலைமையிலான குழு தளத்திற்கு சென்று விட்டதாகவும் சேகர் சில வேளை கொல்லபட்டிருக்கலாம் என்றும் கூறினார். இந்த சந்தர்ப்பத்தில் தோழர் சிறி எனது பொறுப்பில் இருந்தார். சென்னையில் டிசம்பர் 3-ம் தேதியிலிருந்து இவரை காணவில்லை. அது பற்றி மாறனிடம் விசாரித்த போது சிறி கூச் கொலையில் முன்னின்று உழைத்ததாகவும் கூச் என்னை கூட்டி வருமாறு தனது இறுதிநேரத்தில் கேட்ட போதும் செந்திலின் ஓடர் என்றும் கூறினாராம். உண்மையில் நான் தோழர் சிறியிடம் எதுவும் கூறவில்லை. ஒரு கொலை செய்யக் கூடிய மனோதைரியமும் இயக்கத்தின் அதிகாரமோ எனக்கு இருந்ததில்லை. இதனால் நாம் தோழர் சிறியை செருப்பால் அடித்தேன் இது பின்னால் நடந்தது.

இதன் பின் நான் சென்னையில் இருந்த போதும் ராஜன் தலைமையிலான கோஸ்டி வந்து காந்தனையும் கொல்ல முயன்றதாகவும் (P. L. O. T.) புளோட் வாமதேவன் அங்கு சென்று நிலைமையை சீர்படுத்தியதாகவும் என்னை கொல்ல இருவர் சென்னைக்கு வந்ததாகவும் எனக்கு தோழர் (P. L. O. T.) புளோட் வாசுதேவா தகவலை தந்து தனது தனது வீட்டில் என்னை வீட்டுக் காவலில் வைத்தார். இரண்டு மூன்று நாட்களின் பின் நான் நேராக ஒரத்தநாடு சென்று காந்தனை சந்தித்து நடந்தவற்றை கேட்டேன். தேனி, தேனிமுகாமை புதுக்கோட்டைக்கு மாற்றினேன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ராஜன் கோஸ்டியினர் மதுரை வருவதற்கு முன்பதாக நான் மதுரை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த போதும் டிசம்பர் பதினறாம் தேதி நள்ளிரவு வேளையில் சேகர் கொலை செய்யப்பட்டுவிட்டதாக தெரிவித்தவார்கள் கூச் சேகர் இநவரும் கொல்லப்பட்டதன் பின் புளோட்டிடம் ஆயுத உதவி கேட்டேன். காரணம் முகாமை குழப்ப வெளியார் மோட்டார்சயிக்கலில் வந்து போனதாகவும் பாதுகாப்பு தேவையென்றும் கேட்டார். இதற்கிணங்க புளோட்டிடம் உதவி கேட்டிருந்தேன் ராஜன் குழுவினர் தாம் தான் டெலா கூறி செயற்பட தொடங்கியதையடுத்து அவர்களை முறியடிக்க ராஜன் மீதும் அவர்கள் செய்த தவறுகளை பெரிதாக்கி அரசியல் ரீதியான லாபத்தை தேட முயற்சித்தேன். பத்திரிகை துண்டு பிரசுரம் வானொலி உரைகள் மூலம் மிகவும் கடினமாக திட்டினேன் இது எனது சுதந்திரமான செயற்பாடுகள் ஆகும். ஆயினும் ராஜன் குழுவினருடன் பேச்சுவார்த்தை நடத்த காந்தன் சிறி போஸ் எதிர்ப்பு தெரிவித்தனர். ஆயினும் சில முயற்சிகளை மேற் கொண்டேன் அதையும் உமாமகேஸ்வரன் கண்டித்ததினால் அதை கைவிட்டேன் செயற்குழு தெரிவு செய்யப்பட்ட போதும் நான் பதில் தலைவராக தெரிவு செய்யப்பட்டேன் இதன் பின்னல் ராஜன் குழுவினருடன் பேசக் கூடாது என்றும் அவர்கள் புலிகளுடனும் தொடர்புடையவர்கள் என்றும் தோழர் முகுந்தன் (உமா மகேஸ்வரன்) தெரிவித்தர் இவைகள் தான் ராஜனுடன் பேச தடையாக இருந்த காரணங்கள் எனக்கு நாளடைவில் அதிர்ச்சி ஊட்ட கூடிய வகையில் மேற்குறித்த இரு மரணங்கள் தொடர்பாக காந்தன் நடந்து கொண்ட முறை பற்றி சந்தேகம் எழுந்தது. பின்வரும் மூன்று சம்பவங்களை அந்தக் கருமங்கள் தவராணவை என்பதை எடுத்துக் காட்டின.

1. ராஜன் குழுவினர் கூச் சேகர் இருவரையும் ஏன் கொன்றீர்கள் என்று கேட்டதற்கு வேறு வேறு காரணங்கள் சொல்லி தப்பிக்க முயன்றமை.



2. நான் கஸ்டோ தம்பி முரளி ராஜனுடன் இருப்பதால் கஸ்டோ உயிருடன் திரும்பி வந்தால். யாருடன் போவார் என்று கேட்டதற்கு நிச்சயம் அவர் ராஜனின் பக்கம் தான் போவார் அவரையும் பிடித்து தட்டவேண்டும் என்று கூறியதை கேட்டு அதிர்சியுற்றேன்.

3. தோழர் கஸ்டோவை காட்டி கொடுத்தது கூச் சேகர் இருவரும் தான் என்று கூறிய புதிதாக வந்த தோழர்கள் என்னை வழி மறித்து ஏன் கூச்லையும் சேகரையும் கொலை செய்தீர்கள் என்று கேட்டதற்கு நான் நீங்கள் தான் சொன்னதாக காந்தன் குறிப்பிட்டார் என்ற விடயத்தை குறிப்பிட்ட போது அவர்கள் காந்தனிடம் தாம் கூறவில்லை அது அப்பட்டமான பொய் என்று அவர்கள் கூறியமையும் எனக்கு ஆச்சரியத்தை தந்தது.

4. இன்னொரு முறை காந்தன் என்னிடம் முரன்பட்டு கொண்ட போதும் நான் கஷ்டப்பட்டு கொலை செய்ய நீர் தலைவராய் இருக்கீறீர் என்று கடும் கோபமாக பேசினர் இவ்வாறு சந்தேகம் எழுந்ததின் பின்னல் அனைத்து தோழரிடமும் சென்று, இரகசிய விசாரனை நடத்தினேன் அப்போது எனக்கு உண்மை தெரியவந்தது.

## விசாரணை முடிவில்

காந்தன் அனைத்து தோழர்களுக்கும் கொடுத்த தகவல் அனைத்தும் மிக பொய்யானவை என்பதையும் தோழர்கள் கொலை செய்வதற்கான திட்டங்களை வகுத்து கொடுத்தவர் இவர் தான் என்பதையும் கடிதவாயிலாக கொலை செய்வதற்காக உத்தரவுகளையும் கொடுத்திக்கிருர் என்பதையும் இவர் குறிப்பிட்டது போல சிவஜீவன், பிரான்சிஸ் ஆகியோரை கூச் கொல்லவில்லை என்ற உண்மைகளையும் தெரிந்து கொண்டேன் உண்மை தெரிந்ததையடுத்து நான் தோழர்களிடம் சென்று மிகவும் விளக்கமாக சொன்னேன் அவர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களும் காந்தனின் நடவடிக்கைகளை தவறு என்றும் புளொட்
டுக்கும் இக்கொலைகளுக்கும் சம்பந்தம் இருக்கு என்று
இனிமேலும் இவ்வாருன நிகழ்வுகள் நிகழமாலிருக்க எனக்கு
சகல அதிகரங்களும் தருவதாக கூறி கையெழுந்திட்டு
தந்தனர். இந்த விடயங்கள் யாவும் அறிந்த காந்தன்
உமாமகேஸ்வரனின் மைத்துனன் நாகலிங்கத்துடன் சேர்ந்து
மதுரையில் வைத்து என்னை கொலை செய்ய முயன்ற போது
எனது மெய் காப்பாளர்கள் என்னை காப்பாற்றினார்கள்
அடுத்த நாள் காலை 9—6—85 அன்று நேரடியாகவே
காந்தனும் நாகலிங்கமும் வந்து என்னை சுட வந்தனர்
இதன் காரணமாக நான் அன்றிரவு சென்னைக்கு திரும்பி
னேன் உமாமகேஸ்வரனுடன் சென்று காந்தன், கூச், சேகர்
விடயம் பற்றி கூறி அவை நடந்த விதம் பற்றியும் விளக்கி
னேன் காந்தனும் நாகலிங்கமும் என்னை கொலை செய்ய
முயன்றது பற்றியும் கூறினேன் அதற்கு அவர் எந்த நடவடிக்
கைகளையும்என்னை எடுக்க விடவில்லை தோழர்களை முகா
மிற்கு சென்று சந்திக்கவிடவில்லை. இறுதியில் தோழர்கள்
என் மீதும் சாதி துவேசம் கொல்ல செய்து என்னை
வெறுக்குமாறு நாகலிங்கம் செய்தார். இவைகளை தாங்க
முடியாமலும் ஏற்கனவே நாகலிங்கம் எமது அலுவலகத்தை
பூட்டி வைத்த அவமானத்தாலும் நான் தொடர்ந்தும்
நான் இயக்கத்தில் இருக்க முடியாமல் நான் ஒதுங்கினேன்.
நான் என்றெக்குமே மனித உயிர்களை கொலை செய்ய
வேண்டும் என்ற சிந்தனை கொண்டிருந்ததில்லை. யுத்தத்திலும்
ஒரு தருமம் இருக்க வேண்டுமென்று கருதுபவன் மன
சாட்சிக்கு விரோதமான காரியங்கள் செய்ததில்லை. நான்
தமிழிழ விடுதலை ராணுவத்தில் சேர்ந்ததும் தலைவர் தேவ
னின் கொள்கையான எந்த ஒரு விடுதலை போராளிகளையும்
அநியாயமாக கொல்ல கூடாது என்பதை கொள்கையாக
கொண்டிருந்தபடியால் சமுக துரோகிகளை கொல்வதையே
நான் தெரிந்து நின்றவன் நான் தலைமையையேற்று அதன்
பொறுப்பிற்கு உரியவனுக இருந்த காலகட்டத்தில் கூட



எந்த ஒரு மனித உயிர்களையும் கூட கொல்வதற்கு பணிப்
புரை வழங்கவும் இல்லை மற்றவர்கள் செய்தாலும் அதனை
விசயம் தெரிந்து கொண்டும் ஆதரித்ததுமில்லை. கூச், சேகர்
கொலைகள் விசயத்தில் எனக்கு தந்த தகவல் அடிப்படையில்
சரிதான் என்று ஏற்று ஆதரித்தமைக்கு தோழர் கஸ்டோ
காட்டிக் கொடுக்கபபடடார் என குறிப்பிட்டதை மிக சிறிய
குற்றமாக நான் கருதவில்லை இது மிக பார துரமானது
இனத்துரோகமானது நம்பிக்கை துரோகமானது என்று
கருதினேன். ஆனல் அந்த குற்றச்சாட்டை எவ்வளவு
அபாண்டமானது என நான் தெளிவு பெற்றபோதும் நான
மிகவும் வருந்தினேன் விசயம் தெரிந்த நாளிலிருந்து நமது
தோழர்களிடம் பகிரங்கமாக இது பற்றி கூறிவிட்டேன
ஆயினும் மக்கள் மத்தியில் இந்தப் பழியை சுமத்தி துண்டு
பிரசுரங்கள் பத்திரிகைகள், வானொலி மூலமும் பிரச்சாரம்
செய்தமை எனது ஏமாற்றத்தை எண்ணி நான் வெக்கி
நிற்கிறேன் மிக அண்மையில் நிகழ்ந்ததாக கூறப்படும்
ராஜன் குழுவினரின் முகாமிற்கு (புளோட்) குழுவினர்
அத்து மீறி நுழைந்த போது ஏற்பட்ட துப்பாக்கி சண்டை
யின் புளோட் குழுவினர் ஒன்பது பேரும் ராஜன் குழுவின
ரில் ஆறு பேரும் கொல்லப்பட்டதற்கும் எனக்கும் எதுவும்
தெரியாது அவ்வாறு அது நடந்திருந்தால் அதை நான்
வன்மையாக எதிர்க்கிறேன் நான் வேதாரணியம் சென்ற
போது அப்பொழுது தோழர் சேகரை கொலை செய்வதற்கு
காந்தன் அனுப்பி வைத்த ஒரு குழுவினர் அங்கு நிற்பதை
கண்டு அவர்களை அணுகிய போது விசயத்தை குறிப்பிட்
டனர் நான் அதற்கு எதற்கும் ராஜனை ஆலோசித்து செய்
யவும் என்று கூறினேன். ஆனல் இந்த குழுவினர் தளத்
திற்கு செல்ல முன் சேகர் கொலை செய்யப்பட்டு விட்ட
தாகவும் பின்னர் அறிந்தேன்.

சேகர், கூச் கொல்லப்பட்டதன் பின் காந்தன் தன்
இயக்கத்தலைவர் என்ற நிலையில் இருந்தது. இது தோழர்
காந்தனுடைய நடவடிக்கைகளாகும். தோழர் ராஜன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குழுவினர் வந்து காந்தனை கட்டிவைத்து அடித்ததின் பின்
னால் பீதியுற்ற காந்தன் பதவியைப் பற்றி மறந்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்